புரட்சிப்


# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூன் 29, 2023 • புரட்சி 23 • முழக்கம் 24 • விலை ரூ.3.00



## ஆகமம் தெரிந்தால் போதும்; ஜாதி ஒரு தடையல்ல

# ஆகமக் கோயில்களில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்

## • சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பான தீர்ப்பு

***அர்ச்சகர் பதவி மதம் தொடர்பானது அல்ல, அவர் நடத்தும் பூஜை, சடங்குகள் தான் மதம் தொடர்பானது. முறையாக ஆகமம் தெரிந்த எந்த ஜாதியினரும் ஆகமக் கோயில்களில் அர்ச்சகராகலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை (ஜூன் 26) வழங்கியுள்ளது.***

*அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் பிரச்சனையில் சென்னை உயர்நீதிமன்றம் மிகச் சிறப்பான ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் அர்ச்சகர் பணிக்கு விண்ணப்பங்கள் கோரி அறநிலையத்துறை விளம்பரம் வெளியிட்டது. இதை எதிர்த்து கோயில் பரம்பரை அர்ச்சகர் முத்து சுப்பிரமணிய குருக்கள் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார். பாரம்பரிய முறையில் தான் அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும் பழக்கவழக்கங்களை மாற்றக்கூடாது என்று அவர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டிருந்தார்.*

*வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தனது தீர்ப்பில் சில முக்கிய கருத்துகளை சுட்டிக்காட்டி இருக்கிறார். ஆகம கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிப்பவர்கள் ஆகமங்களையும் சடங்குகளையும் தெரிந்திருந்தால் போதும், அவர்களுக்கு ஜாதியோ, பரம்பரையோ ஒரு தடையாக இருக்க முடியாது என்று சென்னை உயர்நீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.*

*சேஷம்மாள் தீர்ப்பில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் நீதிபதி சுட்டிக்காட்டி இருக்கிறார். அர்ச்சகர் பதவி என்பது மதம் தொடர்பானது அல்ல, அது வேலை தொடர்பானது. அவர் செய்யும் சடங்குகள் தான் மதம் தொடர்பானது, எனவே அர்ச்சகர் பதவிக்கு ஆகமத்தை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை, அவர் செய்யும் சடங்குகளுக்கு மட்டும்தான் ஆகமங்கள் பொருந்தும் என்று நீதிபதி சுட்டிக்காட்டி இருக்கிறார்.*

*2002ஆம் ஆண்டு கேரளாவில் ஆதித்யா திருவாங்கூர் எதிர் தேவஸ்வம் போர்டு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கி இருக்கிற தீர்ப்பையும் நீதிபதி சுட்டிக்காட்டி இருக்கிறார். ஒரு ஆகம கோயிலில் பிராமணரோ அல்லது மலையாள பிராமணரோ அர்ச்சகராக இருந்தால் அவர்கள் மட்டும்தான் தொடர்ச்சியாக அர்ச்சகர்களாக இருக்க முடியும் என்ற வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. பிராமணர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்கிறார்கள்' என்பதன் பொருள் பிராமணர் அல்லாதவர் அர்ச்சகர்களாக ஆகக் கூடாது என்பது அல்ல, அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு, வேதம் படிப்பதற்கு தடை போடப்பட்டது, வேதம் ஓதுவதற்கு தடை போடப்பட்டது, பூணூல் அணிவதற்கு தடை போடப்பட்டது, பிராமணர்களுக்கு மட்டுமே இந்த உரிமை இருந்த காரணத்தினால் தான் பிராமணர்களாக இருப்பவர்கள் மட்டும்தான் அர்ச்சகராக முடிந்தது. எனவே இப்பொழுது அதற்கு உரிய தகுதி படைத்த பிராமணரல்லாதார் வந்து விட்ட காரணத்தினால் பிராமணர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்க முடியும் என்ற வாதத்தை ஏற்க முடியாது என்று 2002 ஆம் ஆண்டு கேரளா ஆதித்யா வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தி இருப்பதை நீதிபதி சுட்டிக்காட்டி இருக்கிறார். ஆகமக் கோயில்கள் எவை என்பதை வரையறுக்க வேண்டும் என்று ஏற்கனவே 2002 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற அமர்வு அறிவித்திருந்தது. ஓய்வு பெற்ற நீதிபதி சொக்கலிங்கம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது, அந்த குழுவின் அறிக்கை வருகின்ற வரை காத்திருக்க வேண்டும் என்ற வாதத்தை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை, அதுவரை அர்ச்சகர் நியமனத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை, சொல்லப்போனால் அந்த ஆகமக் குழு நியமனத்தை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே ஆகமக் குழுவின் அறிக்கைக்காக காத்திருக்காமல் இப்போதே அறநிலையத்துறை அர்ச்சகர்களை நியமனம் செய்வதற்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் சுட்டிக் காட்டி இருக்கிறது. இது மிகச் சிறப்பான வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்ப்பு.*

# சென்னையில் கழக தலைமைக் குழு கூடியது

திராவிடர் விடுதலைக் கழக தலைமை குழு கூட்டம் ஜூன் 23 காலை 10:30 மணியளவில் பெருங்குடியில் கழகப் பொதுச் செயலாளர் இல்லத்தில் கூடியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் தலைமைக் குழு உறுப்பினர்கள் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ,அமைப்பு செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி. இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ஆசிரியர் சிவகாமி, சூலூர் பன்னீர் செல்வம், விழுப்புரம் அய்யனார், காவலாண்டியூர் ஈஸ்வரன், சென்னை இரா.உமாபதி, அன்பு தனசேகர், இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் கிராமங்களில் நிலவும் தீண்டாமை வடிவங்களை நேரில் சென்று பார்த்த அனுபவங்களை தோழர்கள் பகிர்ந்து கொண்டனர். முதல் கட்டமாக தயாரிக்கப்பட்ட பட்டியல்களை தொகுத்து மாவட்ட காவல்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம், மனித உரிமை ஆணையத்தில் நேரில் வழங்குவது என்றும் இம்மாத இறுதிக்குள் முதல் கட்ட பட்டியல் தயாரிப்பை இறுதி செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நிகழும் சனாதனம் என்ற பார்ப்பனியத்துக்கும் திராவிடம் என்ற சமூக நீதி தத்துவத்துக்குமான போராட்டங்களை விளக்கி ஆயிரம் தெருமுனைக் கூட்டங்களை நடத்துவது என கழக செயலவையில் தீர்மானித்த முடிவு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. நாள் ஒன்றுக்கு இரண்டு தெருமுனை கூட்டங்களை நடத்துவது என்றும், பொதுமக்களிடம் வழங்க துண்டறிக்கைகள் ஒன்றிய பாஜக பார்ப்பனிய ஆட்சி தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக நடத்தும் திராவிட மாடல் ஆட்சியை முடக்குவதற்கு ஆளுநர், அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, சிபிஐ உள்ளிட்ட அதிகார அமைப்புகளை முறைகேடாக பயன்படுத்துதல் போன்றவை சனாதானத்தை திணிக்கும் முயற்சியே என்பதை மக்களிடம் விளக்குவது என்றும், இதுகுறித்தும் மோடி ஆட்சியில் மாநில உரிமைப் பறிப்புகளை விளக்கும் நூல்களையும் குறைந்த விலையில் சிறு வெளியீடுகளாக வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கும் சூழலில் பார்ப்பனிய சனாதன சக்திகள் தமிழ்நாட்டை மட்டும் குறி வைத்து தங்களது முழுமையான அதிகாரத்துடன் அடக்கி ஒடுக்கி பணிய வைத்து விடலாம் என்று மனப்பால் குடிப்பதை தமிழ்நாடு முறியடிக்கும் என்றும், இது திமுகவுக்கு எதிரான நடவடிக்கையாக சுருக்கி பார்க்க முடியாது, பெரியாரின் சமூகநீதி தமிழ்நாடு மீது நடத்தப்படும் படையெடுப்பாகக் கருதி களத்தில் பரப்புரையை தீவிரமாக முடுக்கி விட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. சேலம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தரும் ஆளுநருக்கு எதிராக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கருப்புக்கொடி போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

### தோழர்களுக்கு வேண்டுகோள்!

கழக நூல்கள் தோழர்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு பல மாதங்கள் ஆன நிலையில் சில பகுதிகளில் தோழர்கள் அதற்கான தொகையை அனுப்பி வைக்கவில்லை, கடும் பொருளாதார நெருக்கடியில் நூல்கள் அச்சடிக்கப்படுகிற நிலையில் தோழர்கள் இதில் ஒத்துழைக்க வேண்டுகிறோம். விற்பனையாகாத நூல்களை தலைமை கழகத்திற்கு உடனடியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தபசி குமரன்
தலைமை நிலைய செயலாளர்

**தலையங்கம்**

## கோயில் நுழைவு உரிமைக்கு வெடிக்கும் போராட்டங்கள்

தமிழ்நாட்டில் தீண்டப்படாத மக்கள் கோயில்களில் நுழைய இன்றும் அனுமதிக்கப்படுவதில்லை. இதை எதிர்த்து ஆங்காங்கே உரிமைப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பி இருக்கின்றன, இது வரவேற்கத்தக்க ஒரு நல்ல திருப்பமாகும். விழுப்புரம் மாவட்டம் மேல்பாதி திரவுபதி அம்மன் கோயிலில் ஒரு சாதிக்காரர்கள் கோயில் எங்களுக்குத் தான் சொந்தம் என்று கூறி தலித் மக்களை உள்ளே விட மறுத்தார்கள். இதை எதிர்த்து போராட்டம் நடத்தியும், அதிகாரிகள் சமரச பேச்சு வார்த்தை நடத்தியும், சாதிக்காரர்கள் இதை ஏற்க மறுத்த காரணத்தினால் அதிகாரிகள் அந்த கோயிலுக்கு சீல் வைத்து விட்டனர்.

கோயிலுக்கு எப்படி சீல் வைக்கலாம்? தலித் மக்களையும் உள்ளே அழைத்துச் சென்றிருக்க வேண்டாமா? என்று சிலர் சில கருத்துக்களை முன் வைக்கிறார்கள். ஜாதித் தீண்டாமை ஒழிப்பு போராட்டம் என்பது ஒரு நீண்டப் போராட்டம், அது பல மைல்கற்களை தாண்டி தாண்டித்தான் செல்ல வேண்டி இருக்கிறது. கோயில்களில் வழிபாட்டு சடங்குகள் நிறுத்தப்பட்டு இருக்கிறது, எனவே புனிதம் கெட்டுவிட்டது எனவே கோவிலை திறக்க வேண்டும் என்று தனிநபர் வழக்கு ஒன்று உயர்நீதிமன்றத்திற்கு வந்தது. ஆனால் அந்த வழக்கின் கோரிக்கையை உயர்நீதிமன்றம் ஏற்க வில்லை. கோயில் திறப்பதை அறநிலையத்துறை தான் முடிவு செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கூறுவிட்டது. கோயிலை பூட்டி வைத்த காரணத்தினால் தான் அடுத்த கட்ட நிகழ்வை நோக்கி இந்த பிரச்சனை நகர்த்தப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும்.

அதேபோல் கரூரில் வீரணம்பட்டி காளியம்மன் கோயிலில் உள்ளூர் சாதிக்காரர்கள், தலித் மக்களை கோயிலுக்கு உள்ளே விட மறுத்தார்கள். இந்த கோயில் தங்கள் சாதிக்கு மட்டும்தான் சொந்தமானது என்று கூறினார்கள், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள், சமரசம் ஏற்படவில்லை, பிறகு கோயில் சீல் வைத்து மூடப்பட்டது. அதற்குப் பிறகு கோயிலை திறக்க வேண்டும் என்று ஆதிக்க சாதியினர் போராடினார்கள், பிறகு மீண்டும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள், இப்போது தலித் மக்களை நாங்கள் கோயிலுக்குள் அனுமதிக்க ஒப்புக் கொள்கிறோம் என்று முன்வந்து விட்டதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே கோயிலை பூட்டுகிற ஒரு நடவடிக்கையை எடுத்த காரணத்தினால் தான் அடுத்த கட்டத்தை நோக்கி இந்த முயற்சி நகர்த்தப்பட்டிருக்கிறது. கோயிலை பூட்டக்கூடாது உடனே தலித் மக்களை உள்ளே அழைத்துச் செல்வதுதான் நியாயம் என்று பேசுகிறவர்கள் அதில் படிப்படியான நிலைப்பாடுகளை எடுத்து முன்னேறிச் செல்ல வேண்டி இருக்கிறது என்ற கள எதார்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் சுட்டிக் காட்டுகிறோம்.

அதே போல் இந்த கோயில் தங்கள் சாதிக்கானது, மற்றவர்கள் உள்ளே நுழையக்கூடாது என்று கூறுகிறார்கள் அவர்கள் நடத்துகிற வணிக நிறுவனங்களில், ஹோட்டல்களில், பல்வேறு தொழில்களில் தங்கள் சாதிக்காரர்களுக்கு மட்டும்தான் பொருட்கள் விற்கப்படும் என்று சொல்வார்களா? ஒருபோதும் சொல்ல மாட்டார்கள். உடல் நலம் பாதிக்கப்பட்ட ஒருவர் தங்கள் சாதி மருத்துவர் தான் கவனிக்க வேண்டும், வேறு சாதி மருத்துவர் தங்களது உடலுக்கு சிகிச்சை அளிக்கக் கூடாது என்று சொல்வார்களா என்று கேட்டால் ஒரு போதும் அப்படி சொல்ல மாட்டார்கள்.

சமூகத்தில் சாதியைக் கடந்த அனைவருக்கும் சமவுரிமைக் கோரும் அரசியல் சட்டத்தின் கீழ் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்துமதம் பெற்றெடுத்த சாதி - கோயில் சடங்குகளில் மட்டும் தன்னை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. அப்போதுதான் பார்ப்பனியம் உயிரோடு இருக்கும் என்பதே அடிப்படையானக் காரணம். இந்து ஒற்றுமையை இந்து மதத்தை பேசிக் கொண்டிருக்கிற சங்கிகள், இந்து மதத்திற்கு உள்ளேயே இப்படி ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை அவமதித்துக் கொண்டிருக்கிறார்களே என்பதை எதிர்த்து ஒரு வார்த்தை கூட சொல்ல முன் வராமல் பதுங்கிக் கிடப்பதையும், இவர்கள் போடுகிற இந்து வேடம் என்பது வெறும் சாதி வெறி வேஷம் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## பாட்னா கூட்டம் காலத்தின் தேவை

2024 தேர்தலை கூட்டாக சந்திப்பது என்று பாட்னாவில் கூடிய 17 எதிர்க்கட்சிகள் முடிவு செய்திருப்பது ஒரு வரலாற்று திருப்பமாகும். காலத்தின் அறைகூவலை சந்திப்பதற்கு எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றன. இந்தக் கூட்டத்தில் பல நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த கூட்டம் சிம்லாவில் நடைபெற இருக்கிறது, அடுத்த தொடர் நடவடிக்கைகள் குறித்து அதில் முடிவெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சிகள் முடிவு செய்து இருக்கின்றன.


பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைப் பார்த்து இப்பொழுதே அலறத் தொடங்கி இருக்கிறது. போட்டோ ஷூட் நடத்துகிறார்கள் என்று அமித் ஷா கூறியிருப்பது இறுமாப்பையும் ஆணவத்தையும் காட்டுகிறது. வருகிற தேர்தலில் இதற்கு மக்கள் நிச்சயம் சரியான பாடத்தை புகட்டுவார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்று பல ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார். தேர்தல் முடிந்த பிறகு கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்று முடிவுக்கு வருவது முறையானது அல்ல என்று அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார். எந்த மாநிலத்தில் எந்த கட்சி செல்வாக்காக இருக்கிறதோ, அந்த மாநில கட்சியின் தலைமையின் கீழ் கூட்டணி அமைய வேண்டும். கூட்டணி அமையும் போது கருத்து வேறுபாடுகள் ஏற்படும் என்று சொன்னால் பொது வேட்பாளரை நிறுத்தலாம் அல்லது தொகுதி உடன்பாடுகளை செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து இருக்கிறார். இந்தக் கூட்டத்தில் ஆம் ஆத்மி கட்சி தலைவர் கெஜ்ரிவால் தெரிவித்திருக்கிற கருத்துக்கள் தான் மிகவும் குழப்பத்தை உருவாக்குவதாக இருக்கின்றன. ஒரு பிரச்சனையை எப்படி அணுகுவது என்பதில் அவருக்கு உள்ள தடுமாற்றத்தைத் தான் காட்டுகிறது. டெல்லியில் ஆம் ஆத்மி அதிகாரத்திற்கு வந்ததற்குப் பிறகு அந்த ஆட்சியை செயல்பட விடாமல் தொடர்ந்து ஆளுநர்களை வைத்து முட்டுக்கட்டை போட்டு வந்தது ஒன்றிய பாஜக ஆட்சி. உச்ச நீதிமன்றம் டெல்லி அரசுக்கு உரிமைகள் உண்டு என்று தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு அவசர சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையும் அவமதிக்கிற செயல்பாட்டில் ஒன்றிய பாஜக ஆட்சி இறங்கியிருக்கிறது.

இந்த அவசர சட்டத்தை எதிர்த்து பல்வேறு மாநிலங்களில் உள்ள தலைவர்கள், மாநில முதல்வர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார் கெஜ்ரிவால். இப்போது காங்கிரஸ் கட்சி இதில் கருத்து தெரிவிக்கவில்லை என்ற ஒரு பிரச்சனையை கெஜ்ரிவால் எழுப்புகிறார். இதில் முதன்மையான பிரச்சனை எது என்பதை நாம் கவனித்தாக வேண்டும். ஒன்றிய பாஜக ஆட்சிதான் ஆம் ஆத்மியின் அதிகாரத்தைப் பறித்தது, ஆளுநரை வைத்து மிரட்டியது, உச்ச நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கின்ற வகையில் அவசர சட்டம் கொண்டு வந்தது. எனவே முதலில் பாஜக ஆட்சி அகற்றப்பட வேண்டும், அதற்குப் பிறகுதான் ஏனைய பிரச்சினைகளைப் பற்றி நாம் சிந்திக்க முடியும். எதிர்க்கட்சிகள் ஒன்றான காங்கிரஸ் கட்சி இதில் கருத்து கூறவில்லை என்பதற்காக எதிர்க்கட்சிகளின் அடுத்த கூட்டத்தில் நான் பங்கேற்க மாட்டேன் என்று சொல்வது தவறான முடிவேயாகும். எது பிரதான முரண்பாடு என்பதில் குழம்பி போய் நிற்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது.

இது பாஜக ஆட்சிக்கு மறைமுகமாக வலிமை சேர்க்கின்ற ஒரு முயற்சி என்பதையும் நாம் சுட்டிக் காட்டியாக வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும் கருத்து முரண் இருந்தாலும் ஒன்றிய பாஜக ஆட்சியை பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு பாட்னா கூட்டத்தில் மேற்குவங்க முதலமைச்சரும் கலந்து இருக்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரும் கலந்து இருக்கிறார். இந்த அணுகுமுறையை கெஜ்ரிவால் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்,

### எது நாத்திகம்?



நமது நாட்டிலோ, சாமி தாசி வீட்டிற்குப் போகும் உற்சம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! சமணரைக் கழுவேற்றும் உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! குடம்,குடமாய் நெய்யையும், வெண்ணெயையும் கொண்டு போய் நெருப்பில் போட்டு வீணாக்கும் கார்த்திகை தீப உற்சவம் வேண்டாம் என்றால், அது நாஸ்திகம்! இளங் குழந்தைகளைப் பாலில்லாமல் கஷ்டப்பட வைத்துவிட்டு, குடம் குடமாய்ப் பாலைக் கொண்டு போய்க் கல்லின் மீது கொட்டும் பாலாபிஷேக உற்சவம் வேண்டாம் என்றால் அது நாஸ்திகம்!

பெரியார், குடிஅரசு – 13.1.1929

# அவசர நிலையை எதிர்த்து வீதிக்கு வந்த கலைஞர்

40.1975 ஜூன் 25-ம் தேதி அவசர நிலையை பிரகடனப்படுத்தினார் இந்திரா காந்தி. எமர்ஜென்சி காமராசரையும் கலைஞரையும் ஒன்று சேர்த்தது. இருவரும் வெவ்வேறு காலங்களில் இந்திரா காந்தியை ஆதரித்ததற்கு இன்று நாடு விலை கொடுக்கிறது என கலைஞரிடம் கூறினார் காமராசர்.

41.எமர்ஜென்சி காலத்தில் பத்திரிகைகள் கடும் தணிக்கைகளுக்கு உள்ளாகின. எமர்ஜென்சிக்கு எதிராக காமராசரின் கருத்துக்களை முரசொலியில் வெளியிட்டார் கலைஞர். காமராசரின் கருத்துக்கள் முரசொலியில் முதல்முதலாக வெளியானது அப்போதுதான்.

42. சென்னை கடற்கரையில் பல லட்சம் மக்களை திரட்டி அனைவரையும் அவசரநிலை பிரகடனத்திற்கு எதிராக உறுதி ஏற்க வைத்தார் கலைஞர்.

43 . மத்திய தகவல் தொடர்பு துறை விடுதலை, முரசொலி ஏடுகளை தணிக்கை செய்தது. அகில இந்திய வானொலியில் தலைமை செய்தியாளராக இருந்து ஓய்வு பெற்ற சங்கராச்சாரி சீடர் சவுமி நாராயணன் என்ற பார்ப்பனர், விடுதலை முரசொலி ஏடுகளின் தணிக்கை அதிகாரியாக இருந்தார். “அண்ணாவை பெற்ற தாயை விட நேசிக்கிறேன்” என்று கலைஞர் எழுதிய வாசகத்தை அந்த பார்ப்பனர் முரசொலியில் நீக்கியவுடன் கோபத்தின் உச்சத்திற்கு சென்றார். கலைஞர் உடனே தொண்டர்களுடன் வீதிக்கு வந்தார், அண்ணா சாலையில் இருந்து ஊர்வலமாக வந்து தணிக்கை அலுவலகம் முன் உண்ணாவிரதம் நடக்கும் என்று அறிவித்தார். மூன்று கிலோ மீட்டர் தூரம் அந்த ஊர்வலம் சென்றது. காவல்துறை ஊர்வலத்தில் பங்கேற்றவர்களை கைது செய்தது, நான்கு மணி நேரம் நடந்த அந்த போராட்டம் தான் இந்தியாவிலேயே அவசர நிலைக்கு எதிராக நடந்த முதல் மக்கள் திரள் போராட்டம்.



44. முரசொலி நாளேட்டில் பத்திரிகை தணிக்கை துறையை கேலி செய்யும் எட்டு கால தலைப்பு செய்திகளை இரண்டு நாள் தொடர்ச்சியாக கலைஞர் வெளியிட்டார். ”வெண்டைக்காய் உடலுக்கு நல்லது, விளக்கெண்ணை உடல் சூட்டை தணிக்கும்” என்று வெளிவந்த அந்த தலைப்பு செய்திகளை வெளியிட்டு பரபரப்பை உருவாக்கினார். முரசொலி ஏட்டில் கார்ட்டூன் வரைந்து வந்த செல்லப்பா என்பவர் இந்திரா காந்தியை ஹிட்லராக சித்தரித்து கார்ட்டூன் வரைந்ததற்காக அவரது கார்ட்டூன் தடை செய்யப்பட்டது. பிறகு கலைஞரே கருத்து படங்களை வரையத் தொடங்கினார்.

45 மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட திமுக தோழர்களின் பட்டியலை முரசொலியில் வெளியிட தணிக்கை துறை அனுமதி மறுத்தது. அப்போது அண்ணா நினைவு நாள் வந்தது, அண்ணா நினைவிடத்திற்கு ’மலர் வளையம் வைப்பதற்கு வர இயலாத தோழர்கள்’ என்ற தலைப்பிட்டு கலைஞர் கைதானவர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டார்.

46. அவசர நிலை பிறப்பித்தவுடன் தமிழ்நாட்டில் திமுக ஆட்சியே நடந்தது. அப்போது பாதுகாப்புக்காக தமிழ்நாட்டுக்கு அடைக்கலம் தேடி பல வட மாநில தலைவர்கள் வந்தார்கள். கலைஞர் அவர்களை பாதுகாத்தார், அவர்களில் ஒருவர் சோசலிஸ்ட் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்.

47. 1976 ஜனவரி 31 அன்று ஒரு பள்ளி விழாவில் பேசிய முதல்வர் கலைஞர் தமிழகத்தின் முதல்வர் என்ற முறையில் இதுவே எனது கடைசி பேச்சாக இருக்கலாம் என்றார். விழா முடிந்து திரும்புவதற்கு முன்பு ஆட்சி கலைக்கப்படலாம் என்பதால் அடைக்கலம் தேடி வந்த பெர்ணாண்டஸை தமிழ்நாட்டை விட்டு பாதுகாப்பாக வேறு மாநிலத்திற்கு சென்று விட ஆலோசனை கூறினார். கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்ட ஒரு மாத காலத்தில் பெர்னாண்டஸ் மேற்கு வங்கத்தில் கைது செய்யப்பட்டார்.

48. 1979-இல் திமுகவையும் அதிமுகவையும் இணைக்க பிஜு பட்நாயக் முயற்சி மேற்கொண்டார். கலைஞரையும், எம்ஜிஆரையும் ஆளுக்கு ஒரு பக்கம் அமர வைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். கலைஞரும் அன்பழகனும் 6 நிபந்தனைகளை வைத்தனர். பெயர் திமுக எனதான் இருக்க வேண்டும், அதிமுக கொடியில் அண்ணா இருப்பதால் அதை ஏற்றுக்கொள்ளலாம், பொருளாதார இட ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் போன்றவை அதில் முக்கியமானவை.

49. திமுக - அதிமுக இணைப்புக்கு சம்மதம் தெரிவித்த எம்ஜிஆர் 2 கட்சிகளின் பொதுக்குழுவிலும் ஒப்புதல் பெற்று இணைத்துக்கொள்ளலாம் என பிஜு பட்நாயக்கிடம் கூறிவிட்டுச் சென்றார். ஆனால் அடுத்த 24 மணி நேரத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். தான் உயிரோடு இருக்கும்வரை இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என மறுநாள் வேலூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கூறிவிட்டார் எம்ஜிஆர்.

50. 1987-ல் எம்ஜிஆர் மறைவுக்குப் பிறகு அதிமுக ஜானகி அணி, ஜெயலலிதா அணி என இரண்டாகப் பிரிந்து 3 மாதங்களில் ஆட்சி கவிழ்ந்தது. மத்தியில் போஃபர்ஸ் ஊழலால் ராஜீவ் காந்தியின் அரசும் ஆட்டம் கண்டது. ராஜீவ் காந்திக்கு எதிராக தேசிய முன்னணியை ஏற்படுத்தினார் வி.பி.சிங். அதில் திமுகவும் ஒரு அங்கமாக இருந்தது.

51. 1989 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திமுக வெற்றி பெற்று கலைஞர் முதல்வரானார். வி.பி.சிங் உள்ளிட்ட தேசிய முன்னணி தலைவர்கள் முன்னிலையில் வள்ளுவர் கோட்டத்தில் பதவியேற்றார் கலைஞர்.

52. பெண்களுக்கு சொத்துரிமை, அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு, ஏழைப் பெண்களுக்கான திருமண நிதி, கைம்பெண்கள் மறுமண நிதி, ஜாதி மறுப்புத் திருமணங்களுக்கு நிதி, கர்ப்பிணிகளுக்கு நிதி போன்ற திட்டங்களை அந்த ஆட்சியில் அறிமுகப்படுத்தினார் கலைஞர்.

53. பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை அதிகரித்தது, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவு உருவாக்கம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக் கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன.

54. நாட்டிலேயே முதன்முறையாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டதும் அப்போதுதான்.

தொடரும்

# தன் மீது புனையப்பட்ட போலி வழக்கை தோலுரித்த வி.பி.சிங்



*ஜூன் 25 விபி.சிங் பிறந்தநாள். சமூக நீதி காவலர், மண்டல் பரிந்துரைகளை அமுலாக்கி இன்றுவரை ஒன்றிய அரசு பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் இடம்பெறுகிறார்கள் என்று சொன்னால் அதற்கு வாய்ப்புக் கதவை திறந்து விட்ட ஒருவர் தான் விபி.சிங். 11 மாதங்கள் தான் அவருடைய ஆட்சி நீடித்தது. நேர்மைக்கும் ஊழலற்ற ஆட்சிக்கும் வழிகாட்டியாக அவர் திகழ்ந்தார். ஆனால் நாட்டில் ஊழல் பெருகிவிட்டது அரசியலில் நேர்மை இல்லை என்று வாய்கிழிய பேசுகிறவர்கள், விபி.சிங்கை பாராட்ட மனம் வருவதில்லை. காரணம் அவர் சனாதனத்தை எதிர்த்தார். சமூக நீதிக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்.*

*இன்று வரை விபி.சிங் அவர்களுக்கு ஒரு தபால் தலை கூட எந்த ஒரு ஒன்றிய அரசும் வெளியிடவில்லை. அவரது சொந்த ஊரான அலகாபாத்தில் ஒரு வீதிக்கு கூட அவரது பெயர் சூட்டப்படவில்லை. எந்த ஒரு அரசு அலுவலக கட்டிடத்துக்கும் அவரது பெயர் சூட்டப்படவில்லை.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் தமிழ்நாடு நன்றியுள்ள மாநிலம் என்று காட்டுகின்ற வகையில் சென்னையில் விபி.சிங் அவர்களுக்கு சிலை அமைக்கப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார். சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் கடற்கரை சாலையில் இந்த சிலை நிறுவப்படவிருக்கிறது.*

*இந்த நிலையில் ஒரு சம்பவத்தை குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும், விபி.சிங் எதிர்க்கட்சியில் இருந்தபோது செயிண்ட் கீட்ஸ் என்ற ஒரு தீவில் தன்னுடைய மகன் ஜெயா சிங் பெயரில் கோடிக்கணக்கில் பணம் சேர்த்து வைத்திருந்தார் என்று ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. அதற்காக செயின்ட் கீட்ஸ் தீவில் First Trust Corporation என்ற வங்கியில் போலி ஆவணங்கள் உருவாக்கப்பட்டன. விபி.சிங் அவரது மகன் ஜெயா சிங் கையெழுத்தோடு வங்கியில் கோடிக்கணக்கான ரூபாய் பணம் போட்டு வைத்திருப்பதற்கான ஆவணங்கள் வெளியிடப்பட்டன. விபி.சிங் பிரதமராக வந்ததற்கு பிறகு தன்னைப் பற்றிய இந்த குற்றச்சாட்டிற்கு சிபிஐ விசாரணை நடத்த அவரே உத்தரவிட்டார். சிபிஐ விசாரணை செய்தது, மத்திய தடயவியல் ஆய்வு ஆவணங்களில் பல உண்மைகள் வெளியே வந்தன. விபி.சிங் பெயரும் அவரது மகன் ஜெயா சிங் பெயரும் கையெழுத்துகளும் அவருடைய பாஸ்போர்ட் விண்ணப்பத்திலிருந்து போலியாக நகலெடுத்து இந்த பொய்யான ஆவணங்கள் உருவாக்கப்பட்டன என்று கண்டறியப்பட்டது. இதற்குத் துணையாக இருந்தவர்கள் அன்றைய காங்கிரஸ் அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த பி.வி.நரசிம்மராவ் ஒன்றிய அமைச்சராக இருந்த கே.கே.திவாரி, அமெரிக்காவில் இருந்த இந்திய தூதரக அதிகாரிகள், First Trust Corporation வங்கியின் மேலாளர் மற்றும் சந்திரா சாமி ஆகியோர் இணைந்து இந்த போலி ஆவணங்களை தயாரித்தார்கள். அமலாக்கத்துறை இதற்கு முழுமையாக உடன்பட்டு நின்றது. அமலாக்கத்துறை இயக்குனராக இருந்த ஏ.பி.நந்தே அப்ரூவராக மாறி அமலாக்கத்துறையின் உதவியோடு தான் இந்த போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன என்பதை ஒப்புக் கொண்டார். அவர் அப்ரூவராக மாறியதற்குப் பிறகு மர்மமான முறையில் மரணம் அடைந்தார். தன்னைப் பற்றிய குற்றசாட்டிற்கு தன்னையே சிபிஐ விசாரணைக்கு உட்படுத்திய ஒரு மாபெரும் தலைவர் தான் விபி. சிங். குற்றம்சாட்டப்பட்டவர்கள் - பிறகு நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சேலம் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டத்தில் நடந்த ஜாதி மறுப்புத் திருமணம்

**சேலம் கிழக்கு - மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 20.06.2023 செவ்வாய் காலை 11.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.**

கலந்துரையாடல் கூட்டத்தில் மாநிலப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், திருப்பூர் மாவட்ட தலைவர் முகில் ராசு, ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொளத்தூர் நகர தலைவர் ராமமூர்த்தி கடவுள் - ஆத்மா மறுப்புடன் கூட்டம் தொடங்கியது. கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநகர , நகர, கிளைக் கழக பொறுப்பாளர்களும், தோழர்களும் தீண்டாமை நிலவும் பகுதிகளின் பட்டியலை கணக்கெடுத்துக் கொண்டிருப்பதாகவும் வரும் 25.06.2023ம் தேதி பட்டியலை மாவட்ட கழகத்திற்கு சமர்பிப் பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் சேலம் மாநகரம் சார்பாக 25 தெருமுனைக் கூட்டங்களும், மேட்டூர் நகர கழகம் 30 தெருமுனைக் கூட்டங்களும், இளம்பிள்ளை -10, நங்கவள்ளி - 10, வனவாசி - 10, சிந்தாமணியூர் - 5, கொளத்தூர் - 10, காவலாண்டியூர் - 10 தெருமுனைக் கூட்டங்களை நடத்துவதாக பொறுப்பாளர்கள் உறுதியளித்தனர்.

மேலும் தெருமுனைக் கூட்டங்களை பறை முழக்கம், பாடல்கள், மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிகள் மூலம் நடத்துவதாகவும் கூறினர். மதியம் தோழர்கள் அனைவருக்கும் அசைவ விருந்து அளிக்கப்பட்டது. மதிய உணவிற்கு பிறகு மீண்டும் கலந்துரையாடல் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தின் நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களின் 76வது பிறந்த நாள் தோழர்கள் கொள்கை முழக்கங்களிட தலைவர் அவர்கள் குழந்தைகளுடன் கேக் வெட்டினார். அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது.கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்ட பொறுப்பாளர்களும், தோழர்களும் கழக தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

நிகழ்வில் ஜாதி மறுப்பு திருமணம் நடைபெற்றது.தென்காசி ஆனைகுளம் செல்வி - மாணிக்க வாசகம் ஆகியோரின் மகள் - வண்ணமதி, ஈரோடு மாவட்டம் அந்தியரைச் சார்ந்த சுலோச்சனா - ராஜீ மகன் சுந்தரராஜ் ஆகியோரின் ஜாதி மறுப்பு திருமணத்தை கழக தலைவர் நடத்தி வைத்தார்.

நிகழ்வில் அறிஞர் அண்ணா சுயமரியாதை திருமண மையத்தைச் சார்ந்த வழக்கறிஞர் இரமேசு பெரியார் கலந்து கொண்டு கழக தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமது உரையில்** “**இந்தியாவில் நடந்த முதல் மனித உரிமைப் போராட்டம் வைக்கம் போராட்டமென்றும், அதற்காக பெரியார் இரண்டு முறை சிறை சென்று கடுங்காவல் தண்டனை பெற்றார் எனவும், ஜாதி அடையாளம் இல்லாத நாம் தீண்டாமை நடைபெறும் இடங்களை கணக்கெடுத்து முழுமையாக அரசு அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் தமது உரையில் குறிப்பிட்டார். 2023-ல் நமது இயக்கம் ஜாதி தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை தீவிரமாக எடுத்துச் செல்ல வேண்டுமென்றும், அதற்காக தோழர்கள் சிறை செல்லவும் தயாராக வேண்டும்**” என்று தமது உரையில் குறிப்பிட்டார். மதிய உணவு ஏற்பாடுகளை மேட்டூர் நகரத் தலைவர் மார்ட்டின் செய்திருந்தார். சுதா நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் மாலை 5.30 மணிக்கு நிறைவடைந்தது.

## நங்கவள்ளி ஒன்றியம் தயாராகிறது

18.06.2023 ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் நங்கவள்ளி நகர கழக கலந்துரையாடல் கூட்டம் தோழர் காவை ஈசுவரன் , தலைமைக் குழு உறுப்பினர் தலைமையில், நங்கவள்ளி ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் இல்லத்தில் கடவுள் மறுப்பு வாசகத்துடன் தொடங்கியது.

கலந்துரையாடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1). தீண்டாமை நிலவுகின்ற கிராம பகுதிகளான நங்கவள்ளி ஒன்றியத்தில் தோழர்கள் பிரபாகரன், அருள்குமார், நாகராஜ் ஆகியோரது தலைமையில் கணக்கெடுப்பு நடத்துவதெனவும், கொங்கனாபுரம் ஒன்றியத்தில் தங்கதுரை, கண்ணன், கவியரசு ஆகியோரது தலைமையிலும், மேச்சேரி ஒன்றியத்தில் கிருஷ்ணன், சிவா, சந்திரசேகர் ஆகியோரது தலைமையிலும், தீண்டாமை நிலவுகின்ற கிராம பகுதிகளை கண்கெடுப்பு நடத்தி வருகிற ஜூன் 25 ஆம் தேதிக்குள் மாவட்ட கழகத்திடம் ஒப்படைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

2) எது திராவிடம், எது சனாதனம் என்னும் தலைப்பில் கிராம பிரச்சார கூட்டங்கள் நங்கவள்ளி ஒன்றிய கிளைக் கழகத்தின் சார்பில் முதல்கட்டமாக 10 கிராமங்களில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

3) நங்கவள்ளியில் உள்ள பாசக்குட்டை பகுதியில் வசிக்கும் அருந்ததியின மக்கள் வெகுநாட்களாக போராடியும், நெடுஞ்சாலை ஓரமாக இறந்தவர்களின் உடல்களை புதைக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கான மயான வசதியை ஏற்படுத்தி தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் திராவிடர் விடுதலைக் கழகம் முறையிட்டு அவர்களுக்கான மயான வசதியை உறுதி செய்வோம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கலந்து கொண்டோர் : காவை ஈசுவரன், கிருஷ்ணன், தங்கதுரை, நாகராஜ், அருள்குமார், சந்திரசேகர், கவியரசு, தமிழருவி, பிரபாகரன், கண்ணன், பேரறிவாளன், சிவா.

தோழர்களுக்கு தேநீர், வடை லலிதா அவர்கள் வழங்கினார். சிவா நன்றி கூறினார்.

## மடத்துக்குளம் மோகன்

### நினைவேந்தல் கூட்டம்

01.06.2023 காலை 10.00 மணியளவில் திருப்பூர் மாவட்ட திவிக சார்பாக மறைந்த கழக தலைமைக் குழு உறுப்பினர் தோழர் மடத்துக்குளம் மோகன் நினைவேந்தல் நிகழ்வு மடத்து குளம் நான்கு சாலை சந்திப்பு பகுதியில் மடத்து குளம் திவிக ஒன்றியத் தலைவர் த.கணக்கன் தலைமையில் நடைபெற்றது. மோகன் குடும்பத்தினர் ஜோதி - அறிவுமதி முன்னிலை வகித்தனர்.

பன்னீர்செல்வம், CITU தாலுகா செயலாளர். வீ.சிவகாமி, தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம். முகில் ராசு, மாவட்ட தலைவர் , திவிக. முருகேசன், வழக்கறிஞர் பிரிவு, திராவிட தமிழர் பேரவை. தங்கவேல், மாவட்ட அமைப்பாளர், திராவிட தமிழர் கட்சி, ஜின்னா ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

சபரி, சரசுவதி, ஜெயந்தி, சிரிஜா, ரூபா, மாரிமுத்து, தாராபுரம் செல்வம், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் யாழிசை,யாழினி, அறிவுமதி, முத்தமிழ், காரைக்குடி கனல் மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை மடத்துக்குளம் திவிக ஒன்றியச் செயலாளர் சிவானந்தம் ஒருங்கிணைத்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : June 30, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran